2014 பிப்ரவரி 3]

எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

பேருந்து வசதி

***25025—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரிலிருந்து திருவண்ணாமலை, வேலூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் மற்றும் திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, அடுத்து நடக்க இருக்கும் தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களின் ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், ஏழையெளிய மக்களையும் கட்டிக் காத்து இன்றைய தமிழகத்தின்

[2014 பிப்ரவரி 3

நம்பிக்கை நட்சத்திரமாய், நாளைய பாரதத்தின் விடிவெள்ளியாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கிட துறைகள் தோறும் திட்டங்கள் தீட்டி, நலிந்துகிடந்த போக்குவரத்துத் துறையினைத் தலைநிமிரச் செய்து தொலைநோக்குப் பார்வையோடு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில்தான் எங்களது துறையூர் தொகுதிக்கு கிளை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்ட ரூ.98 இலட்சத்திற்கும், உப்பிலியாபுரத்தில் கூடுதல் பணிமனை அமைக்க ரூ.1 கோடியே 25 இலட்சத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய வழித்தடங்களில் 6 நெடுந்தூரப் பேருந்து வசதிகளை செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூரிலிருந்து திருவண்ணாமலை, வேலூருக்குப் புதிய பேருந்து வசதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காணொளிக் காட்சிமூலம் செய்து கொடுத்திருக்கிறார்கள். வேலூரிலிருந்து திருப்பதிக்கு சுமார் 80 கி.மீ. தூரம்தான் உள்ளது. எனவே, மரியாதைக்குரிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, துறையூரிலிருந்து திருப்பதிக்கு பேருந்து நீட்டிப்பு வசதி செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர்–திருப்பதி வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையேயான Interstate agreement சம்பந்தப்பட்டது. இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று அந்த பேருந்து வழித்தடத்திற்கு உண்டான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு பேருந்து இயக்குவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும்

2014 பிப்ரவரி 3]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற காலங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

மான் பூங்கா

***7835—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் பகுதியிலுள்ள மான் பூங்காவில் மான்களுக்கு குடிநீர் வசதி செய்யவும், சுற்றுச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களால் நான், மக்களுக்காக நான் என்ற உயரிய கோட்பாடோடு எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு, நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், வனவிலங்குகளுக்கும், வனத் துறைக்கும் நல்ல பல திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக